2015 பிப்ரவரி 19]
20—

பொறியியல் கல்லூரி

***41084—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் புதிதாக அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.*

திரு. சு. மாதேஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாட்சிமைதாங்கிய தமிழகத்தினுடைய மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாத மலர்களை வணங்குகிறேன்.*

தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநிலம் தழுவிய மூன்று இடங்களை பெற்ற பள்ளிகளும் ஆத்தூர் தொகுதியைச் சாரும். அத்தகைய தொகுதியிலே திறமையாகப் படிக்கின்ற பள்ளி மாணவ மாணவிகள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் சென்ற 2013–2014 ஆம் ஆண்டிலே பரிசு பெற்றிருக்கிறார்கள். அங்கிருக்கின்ற பள்ளிகளிலேயே ADW School*–ம் நூறு சதவிகிதம் தேர்ச்சி பெற்றுள்ளது. இது பின்தங்கிய பகுதியாகும். ஆகவே, இதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்வரும் காலங்களிலே பல்துறை சார்ந்த தொழில்நுட்பக்*

கல்லூரியையாவது வழங்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், 577 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. அரசு பொறியியல் கல்லூரிகள் 10–ம், அரசு நிதியுதவி பெறும் பொறியியல் கல்லூரிகள் 3–ம், சுயநிதிப் பொறியியல் கல்லூரிகள் 546–ம், அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரிகள் 18–ம் என ஆக மொத்தம் 577 கல்லூரிகள் இருக்கின்றன. மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக, 2,92,042 இடங்கள் இருக்கின்றன. ஆனால், சென்ற ஆண்டு பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று சொன்னால், 1,67,082 ஆகும். இந்த நிலையில் ஏற்கெனவே மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் படிக்க வசதியாக 1,24,960 காலியிடங்கள் இருக்கின்றன.*

அதோடுமட்டுமல்லாமல், சேலம் மாவட்டத்தில் 22 பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன. சேலம், கருப்பூரில் ஓர் அரசு பொறியியல் கல்லூரி இருக்கிறது. அந்த அரசுப் பொறியியல் கல்லூரியில் 52 காலியிடங்கள் இருக்கின்றன. இந்நிலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போன்று ஒரு பொறியியல் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால், சுமார் ரூ.100 கோடி தேவைப்படுகிறது. ஏற்கெனவே மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்தில் கிராமப்புறங்களில் வறுமைக்கோட்டிற்குக் கீழே இருக்கக்கூடிய, பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களின் நலனைக் கருதிதான், தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு தமிழகத்திலே 53 கல்லூரிகளைத் தந்து, தமிழகத்திற்குப் பெருமை சேர்த்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றில் 32 கல்லூரிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஆகும். 11 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறார்கள்; அதோடுமட்டுமல்லாமல், 4 அரசு பொறியியல் கல்லூரிகளைத் தொடங்கியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், 10 பொறியியல் கல்லூரிகள்

2015 பிப்ரவரி 19]

இருக்கின்றன. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் 6 பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மேலும் சொல்லவேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் 5 அரசு பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்பட்ட வரலாறு, மிகப் பெரிய வரலாறு ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொறியியல் கல்லூரி இல்லையென்று சொன்னாலும்கூட, பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு 11 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளைத் தந்து, அந்தக் கல்லூரிகளுக்கெல்லாம் கட்டடங்கள் வழங்கி, தமிழகத்தில் மாணவர்களின் எண்ணிக்கை விகிதம் உயருவதற்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை, அரசு எதிர்காலத்தில் நிதிநிலைக்கு ஏற்ப பரிசீலித்து முடிவெடுக்கும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

திரு. சு. மாதேஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அதுபோல் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நன்றாகப் பயிற்றுவித்து, தமிழக வரலாற்றில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த அந்தப் பள்ளியின் ஆசிரியர் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். துறை சார்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என் தொகுதி மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதியில் அரசுக்

[2015 பிப்ரவரி 19

கல்லூரி, தனியார் கல்லூரி என்று ஒன்றுகூட இல்லை. தளி தொகுதியில் பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள பழங்குடி மற்றும் மலைவாழ் மக்களுடைய குழந்தைகள் உயர் கல்வி கற்கவேண்டுமென்றால், 100 கிலோ மீட்டர் தூரம் பயணித்து கிருஷ்ணகிரி செல்லவேண்டும் அல்லது அண்டை மாநிலத்திலுள்ள பெங்களூரு சென்று உயர் கல்வி படிக்கவேண்டிய நிலையிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட தொகுதியிலே அரசு விழாக்களில் பங்கேற்கும்போது தொகுதி மக்கள் இதுகுறித்து பலமுறை மாண்புமிகு அமைச்சரிடத்தில் முறையிட்டிருக்கிறார்கள். ஆகவே, பழங்குடி மக்களுடைய குழந்தைகள் உயர் கல்வி கற்கும் வகையிலே, தளியிலே ஒரு பொறியியல் கல்லூரியோ அல்லது ஒரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியோ துவக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி எப்போதெல்லாம் வருகிறதோ, அந்த நேரத்திலெல்லாம், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குப் பல்வேறுபட்ட கல்வி நிலையங்கள் தந்து பெருமை சேர்த்தவர் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பர்கூரிலே ஒரு பொறியியல் கல்லூரியைத் தந்ததும் மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். கிருஷ்ணகிரியிலே ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் தந்ததும் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். தளி தொகுதி, ஓசூர் பகுதியிலே, இதுவரை அரசு சார்ந்த கல்லூரிகள் இல்லாத நிலை நீண்டகாலமாக இருந்தது. நீண்டகாலமாக இருந்த மக்களுடைய கோரிக்கையை ஏற்று, ஓசூரில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை சென்ற ஆண்டு தந்த பெருமை மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தளி தொகுதிக்கு ஒரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.

2015 பிப்ரவரி 19]

உண்மையிலேயே அந்தப் பகுதி பின்தங்கிய பகுதிதான். இதை எதிர்காலத்தில் மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கு ஏற்ப அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

21—

நெல் கொள்முதல் நிலையம்

***1938—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதியில் கூடுதலாக நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது வெற்றியை நாளைய சரித்திரம் சொல்லும் என்கிற வெற்றி வரிசையில் சட்டமன்றத் தேர்தலில் சாதனை வெற்றி; உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி; கூட்டுறவுத் தேர்தலிலும் வெற்றி; நாடாளுமன்றத் தேர்தலில் நாடு போற்றும் வெற்றி; இடையில் வந்த இடைத் தேர்தல்கள் எல்லாவற்றிலும் வெற்றி; ஸ்ரீரங்கம் வெற்றி; வஞ்சகத்தை, சூழ்ச்சியைத் தவிடுபொடியாக்கி, மக்கள் அம்மா அவர்களுக்கு அளித்த மணிமகுட வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) இனி வருங்காலங்களிலெல்லாம் எங்கள் அம்மா அவர்களுக்கு மட்டுமே வெற்றி, வெற்றி, வெற்றி என்கிற (மேசையைத் தட்டும் ஒலி) வரலாறுகளைப் படைத்துக்கொண்டிருக்கக்கூடிய மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.